# புகை-அற்ற ஒன்டேரியோ சட்டம் 2005
## எவ்வாறு இச்சட்டம் பாதிக்கிறது : சில்லறை வியாபாரிகளை

## அடிப்படைகள்

- புகை-அற்ற ஒன்டேரியோ சட்டம் (SFOA) மே 31, 2006 அன்று அமலுக்கு வருகிறது.
- இச்சட்டம் ஒன்டேரியோவின் தொழிலாளர்களையும், பொது மக்களையும் மறைமுகப் புகையின் (Second-hand smoke) இடர்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு, உள்ளடக்கப்பட்ட வேலையிடங்கள் மற்றும் உள்ளடக்கப்பட்ட பொது இடங்களில் புகை பிடித்தலை தடை செய்கிறது.
- சில்லறை வியாபாரிகளின் விளம்பர காட்சிக்காக வைப்பது மற்றும் வியாபார ஊக்குவிப்புக்கள் மீதும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.
- இளைஞர்களுக்கு புகையிலை விற்பதன் மீதான கட்டுப்பாடுகள் வலுப்படுத்தப் பட்டுள்ளன.

## சிகரெட் மற்றும் மற்றபிற புகையிலைப் பொருட்களை காட்சிக்கு வைப்பதின் மீதான கட்டுப்பாடுகள்

- புகையிலைத் தயாரிப்புக்களை விற்பனைப் பிரிவு மேஜையின் மீது விளம்பர காட்சிக்கு வைப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.
- வாங்குவதற்கு முன்னரே சிகரெட்டுகளையோ அல்லது மற்ற பிற புகையிலைத் தயாரிப்புக்களையோ உபயோகிக்க வாடிக்கையாளர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.
- மே 31, 2006-லிருந்து மே31,2008 வரை சிகரெட்டுகள் தனித்தனி பாக்கெட்டுகளாக மட்டுமே காட்சிக்கு வைக்க வேண்டும். கார்டன்களை காட்சிக்கு வைப்பது அனுமதிக்கப் படமாட்டாது.
- மே 31, 2008-அன்றிலிருந்து புகையிலைத் தயாரிப்புகள் எதுவும் காட்சிக்கு வைக்கப்படக்கூடாது.

Ontario

## சிகரெட்டுகள் மற்றும் மற்ற பிற புகையிலைப் பொருட்களின் வியாபாரத்தை ஊக்குவிப்பது மீதான கட்டுப்பாடுகள்

- ஒரு குறிபிட்ட பிராண்டின் புகையிலைத் தயாரிப்பை பிரதிபலிக்கும் எந்த விற்பனை ஊக்குவப்பு பொருளும் தடைசெய்யப்பட்டுள்ளது. தடைசெய்யப்பட்டுள்ள விளம்பர காட்சிக்கு வைப்பது பற்றி சில உதாரணங்கள்:
  - குறிப்பிட்ட பிராண்டுகளுடன் தொடர்புடைய அலங்கார முகப்புகள் மற்றும் பின்புறத் திரை வைத்தல் (வழக்கமாக இவை "பவர் வாள்" எனப்படுகின்றன)
  - பின் புறத்திலிருந்து வெளிச்சமளிக்கும் அல்லது விளக்கு அலங்காரம் செய்யப்பட்ட முகப்புக்கள்
  - வியாபார ஊக்குவிப்பு விளக்கு அலங்காரம்
  - மூன்று பரிமாண காட்சிப்பொருட்கள்

- புகையிலைப் பொருட்களின் விற்பனையைக் குறிப்பிடும் அடையாளக் குறிகள், சில்லறை வியாபாரிகள் புகையிலைப் பொருட்களை விற்பதையும் அப்பொருட்களின் விலையையும் மட்டுமே வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிக்க அனுமதிக்கப் படுகிறது. மேலும் :
  - அடையாளக் குறியின் அளவு 968 சதுர சென்டிமீட்டரைத் தாண்டக் கூடாது.
  - விற்பனைக்குறிகள் வெள்ளைநிறப் பின்னணியில் கருப்பு எழுத்துக்களில் இருக்க வேண்டும்.
  - ஒரு குறியில் தோன்றும் வாசகம் கடைக்கு வெளியிலிருந்து தெரியக்கூடாது.
  - சில்லறை வியாபாரி ஒருவர், புகையிலை பொருட்கள் மற்றும்/அல்லது புகையிலைத் தயாரிப்பு துணைப்பொருட்களை குறிக்கும் உயர்ந்த பட்சம் மூன்று அடையாள குறிகளை மட்டுமே காட்சிக்கு வைக்க முடியும்.
  - புகையிலை அல்லது புகையிலைத்-தொடர்பான தயாரிப்பின் ஒரு குறிப்பிட்ட பிராண்டை அடையாளக் குறிகள் அடையாளம் காட்டக்கூடாது.

## தேவையான அடையாளக் குறிகள்

*நோ ஸ்மோகிங் (புகை பிடிக்கக்கூடாது)* குறிகளை அனைத்து நுழைவு வாயில்கள், வெளியேறும் வழிகள், கழிப்பிடங்கள் மற்றும் மற்ற பிற பொருத்தமான இடங்களில், புகை பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளதை அனைவரும் அறியும் வண்ணம் ஒட்டி வைக்கவேண்டும். மேலும், புகையிலைப் பொருட்களின் அனைத்து சில்லறை வியாபாரிகளும் விற்பனை செய்யுமிடத்தில் வாங்குபவர் தெளிவாக பார்க்கக்கூடிய வகையில் கீழ்க்கண்ட விளம்பரங்களை வைக்க வேண்டும்.


Ontario

- ஒரு வயதுக் கட்டுப்பாடு மற்றும் உடல் நல எச்சரிக்கை குறி.
- ஒரு அரசு ஐடி (அடையாள) குறி.

தேவையான அடையாளக்குறிகளை பெறுவதை பற்றிய தகவலுக்கென தயவு செய்து உங்கள் உள்ளூர் அரசு சுகாதாராப்பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

## சில்லறை வியாபாரியின் கடமைப் பொறுப்புக்கள்

*வெளிப்படையான வயது*

25 வயதுக்கும் குறைவானவராகத் தோற்றமளிக்கும் எவருக்கும் புகையிலையை விற்குமுன், அவரது அடையாள அட்டையை காண்பிக்குமாறு சில்லறை வியாபாரி அவரை கேட்க வேண்டும். அதன் மூலம் அவர் குறைந்தது 19 வயதுடையவராக இருப்பதை உறுதி படுத்திக்கொள்ள வேண்டும். ஏற்றுக்கொள்ள வேண்டிய அடையாள அட்டையில், அந்நபரின் புகைப்படம் மற்றும் அதுனுடன் அவருடைய பிறந்த தேதி இருப்பதுடன், அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது போன்று ஒரளவுக்காவது தோன்ற வேண்டும். சில உதாரணங்கள் :

- ஒன்டேரியோ ஒட்டுநர் உரிமம்
- கனடா நாட்டு பாஸ்போர்ட்
- கனடா நாட்டு குடியுரிமை அட்டை
- கனடா நாட்டு இராணுவப்படை அடையாள அட்டை
- ஒன்டேரியோ மதுக் கட்டுப்பாடு வாரிய புகைப்பட அட்டை

சில்லறை வியாபாரிகள் ஹெல்த் கார்டை கேட்டுப் பெற முடியாது என்றாலும், வாங்குபவர் அதை அளித்தால் மற்றும் அது உங்கள் படம் மற்றும் பிறந்த தேதியைக் கொண்டுருந்தால், அதை அடையாளமாக ஒப்புக்கொள்ளலாம்.

*பிரதிநிதி கடமைப்பொறுப்பு*

சட்டத்தில் ஒரு குறிப்பிட்ட மாற்றம், பிரதிநிதி கடமைப் பொறுப்பு என்ற கருத்தாகும். அதாவது உரிமையாளர்கள் தங்கள் சொந்த செயல்களுக்கென பொறுப்பானவர்கள் மட்டுமல்லாமல், தங்கள் ஊழியர்கள் செயல்களுக்கெனவும் பொறுப்பேற்கிறார்கள். ஐந்து ஆண்டுகளுக்குள் இரண்டு அல்லது மேலான சந்தர்ப்பங்களில், ஒரே முகவரியில் குற்றத்தீர்ப்பு பெற்றால், உரிமையாளர் தடையுத்தரவு ஒன்றை தானாகவே எதிர்கொள்வார்.


Ontario

## அமலாக்கம்

உள்ளூர் அரசு பிரிவுகள், சட்டத்தை அமல் படுத்தும் பொருட்டு, சில்லறைக் கடைகள் தொடர்பாக சோதனைகளை நடத்துவதுடன் குற்றச் சாட்டுகளையும் விசாரிக்கும்.

## அபராதங்கள்

*சட்டத்தின் இப்பிரிவின் கீழ், சில்லறை வியாபாரி ஒருவர் பல்வேறு அபராதங்களை எதிர்கொள்ளலாம். இச்சட்டத்தின் கீழ் தங்களுக்கு பொருந்தக்கூடிய குறிப்பிட்ட குற்றச் சாட்டுக்கள் மற்றும் தானாகவே விதிக்கப்படும் தடையுத்தரவுக்கு காரனமான குற்றங்களுடன் சில்லறை வியாபாரிகள் தங்களை பழக்கப் படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தப் படுகின்றனர்.*

## புகையிலை பொருட்களின் விற்பனை, சேமிப்பு மற்றும் டெலிவறி ஒத்துக்கொள்ளுதல் மீதான தடை

புகை-அற்ற ஒன்டேரியோ சட்டத்தின் குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறியதற்காக அல்லது புகையிலை வரிச்சட்டத்தின் குறியிடப்படாத சிகரெட்டுகள் விற்பனை நிபந்தனை காரணமாக இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட சந்தர்ப்பங்களில் புகையிலை விற்பனை செய்த குற்றத்திற்கென தண்டிக்கப்பட்ட ஒரு சில்லறை வியாபாரி விற்பனை, சேமிப்பு அல்லது புகையிலை டெலிவறி ஒத்துக்கொள்ளுதலுக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது "தானாகவே பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவு (automatic prohibition)" என குறிப்பிடப்படுகிறது. இந்த தடை உத்தரவு காலம், 6 மாதங்களிலிருந்து 12 மாதங்கள் வரை, முந்தைய தண்டனைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து மாறுபடும்.

## அபராதங்கள்

கம்பனிகள், முதல் குற்றத்திக்கு $10,000 மற்றும் மூன்றாவது அல்லது அதற்கும் மேற்பட்ட குற்றங்களுக்கு உயர்ந்த பட்சமாக $1,50,000 அபராதம் விதிக்கப்படும்.
தனி நபர் ஒருவருக்கு, முதல் குற்றத்திற்கென உயர்ந்தபட்ச அபராதமாக $4,000 மற்றும் மூன்றாவது மற்றும் அதற்கும் மேற்பட்ட குற்றங்களுக்கென $100,000 உயர்ந்தபட்ச அபராதமாக விதிக்கப்படும்.

இந்த தகவல் தாளை ஒரு விரைவு நோக்கீட்டு உபயோகத்திற்கென மட்டுமே பயன் படுத்த பரிந்துரைக்கப் படுகிறது. கூடுதல் தகவலுக்கென, தயவு செய்து உங்கள் உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.



Ontario

கட்டணமற்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டும்  நீங்கள் தகவல் பெறலாம்.

- **INFOline** 1-866-396-1760
- **TTY** 1-800-387-5559

வேலை நேரம் : திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை.

புகை அற்ற ஒன்டேரியோ சட்டம் பற்றிய கூடுதல் தகவலுக்கென, தயவு செய்து சுகாதார முன்னேற்றத்திற்கான ஒன்டேரியோ அமைச்சக வலையகத்திற்கு வருகை தாருங்கள்: http://www.mhp.gov.on.ca/english/health/smoke_free/legislation.asp.

மே 2006



Ontario